# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு
## (கூட்டிணைத்தல்)

**செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ புத்திக பதிரண*
*அவர்களால் 2013, யூன் மாதம் 05 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, மே மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ *244 ஆம் சட்டமூலம்* ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007321-350 (2013/06)

## செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்)

## செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

" செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பு 2006 ஆம் ஆண்டு சனவரி 20 ஆம் திகதி உருவாக்கப்பட்டதோடு, சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தைக் கூட்டிணைத்தல்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாப

2-PL 007321 -50 (2013/04)

னம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) '' செரெட்செ காமா மன்றம் நம்பிக்கைப் பொறுப்பு'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பொட்ஸ்வானாவின் முதலாவது சனாதிபதி ஸ்ரீமத் செரெட்செ காமா அவர்களை எப்போதும் நினைவு கூருதலும் அமைதி மற்றும் ஒற்றுமை பற்றிய அவரது செய்தியை இலங்கையில் பரப்புதல் ;

(ஆ) கலாசார, சமூக மற்றும் பொருளாதார பரிமாற்றத்தை மேம்படுத்திக்கொண்டு இலங்கை மற்றும் பொட்ஸ் வானா ஆகிய இரு நாடுகளிடையேயும் தொடர்புகளை விருத்தி செய்தல் ;

(இ) வறியோர் நிவாரண சேவைகள் மற்றும் ஏழ்மையை அகற்றும் கருமங்களில் ஈடுபடுதல் ;

(ஈ) பொட்ஸ்வானா பல்கலைக்கழகத்தில் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பொருத்தமான மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குதல் மற்றும் புலமைப் பரிசில், மாணவர் உதவிகளை வழங்குதல் ;

(உ) இயற்கை அனர்த்த நிகழ்வுகளின் போது உதவி வழங்குதல் மற்றும் நிவாரண உதவிகளை வழங்குதல் ;

(ஊ) பொதுமக்களிடையே நிலவும் சகல முரண்பாடுகளையும் அகற்றுதல் மற்றும் சட்டத்தின் ஆதிபத்தியத்தைப் பேணுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;

(எ) தமது வாழ்க்கையை மேலோங்கச் செய்வதற்காக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உதவுதல் ;

(ஏ) இளைஞர்களுக்கான விடுதிகள், மருத்துவ நிலையங்கள் மற்றும் வீடுகளை நிர்மாணித்து பராமரித்து வருதல் ;

(ஐ) அறிவை வளர்ப்பதற்கு சர்வதேச இணையங்கள் மற்றும் வானொலி நிலையங்களை நிறுவுதல் ;

(ஒ) மக்களின் வாழ்க்கை நிலையை முன்னேற்றகர மாக்குவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் ;

(ஓ) இன்னல் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் மீள் சீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல ;

(ஔ) மக்களின் நலனோம்பல் கருதி மருத்துவ உதவி மற்றும் சட்ட உதவி என்பவற்றைக் கூட்டிணைத்தல் ; அத்துடன்

(க) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான இடைநேர்விளைவானதும் விரும்பத் தக்கதுமான ஏனைய எல்லாக் கருமங்களையும் செய்தல்.

நம்பிக்கைப் பொறுப்பின் உள்ளடக்கம்.

**4.** (1) நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை, ஆகக் குறைந்தது மூவர் மற்றும் ஆகக் கூடியது ஏழு பேரையும் கொண்டிருத்தல் வேண்டும். இதில் ஐந்து பேர் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமைய நியமிக்கப்படுவதோடு, ஏனையோர் அவசியம் எனக் கருதின் நம்பிக்கைப்பொறுப்பினால் நியமிக்கப்படுவர்.

(2) திரு. சூலபத்மேந்திர தஹநாயக்க சீவியகால நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆவதுடன், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்து வருட காலத்திற்கு நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரும் ஆவார்.

(3) ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குப் பதவி வகிப்பர்.

(4) நம்பிக்கைப் பொறுப்பினால் நியமிக்கக்கூடிய எந்தவொரு நம்பிக்கைப் பொறுப்பாளரும் நம்பிக்கைப் பொறுப்பின் விருப்பத்திற்கமைய ஐந்து வருடங்களுக்கோ அல்லது அதற்குக் குறைந்த காலத்திற்கோ பதவி வகிப்பர்.

(5) திரு. சூலபத்மேந்திர தஹநாயக்கவின் இறப்பின்போது தம்மிடையே ஒருவரைத் தலைவராக நியமிப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய புதிதாக ஒருவரை நியமிக்கும் உரிமை ஏனைய நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு உண்டு.

(6) நம்பிக்கைப் பொறுப்பாளர் எவரும் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல நேரிடின் அல்லது இயலாமை நிலைக்கு உள்ளாகின் அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவிப்பின் அல்லது பதவியிலிருந்து விலகிச் செல்லின் அல்லது எந்தவொரு நம்பிக்கைப் பொறுப்பாளரும் இறக்க நேரிடின், அவருக்குப் பதிலாக, நம்பிக்கைப் பொறுப்பாளரொருவரை உடனடியாக நியமிப்பதற்கு அப்போதைக்கு உள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும் அத்தகைய அடுத்துப் பின்வரும் நம்பிக்கைப் பொறுப்பாளரின் விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படல் வேண்டும்.

(7) நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவர், 2/3 பங்கு பெரும்பான்மை நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் வாக்குகள் மற்றும் நியமிக்கப்பட்டவரின் விருப்பத்தின் மீது விலக்க முடியும்.

**கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.**

**5.** (1) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகவும் நம்பிக்கைப் பொறுப்பின் ஏற்பாடுகளுக்கு அமையவும் நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமானதும் அல்லது இடைநேர்விளைவானதும் அல்லது விரும்பத்தக்கதுமான ஏனைய எல்லாக் கருமங்களையும் செய்யும் அதிகாரம் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு.

(2) (1) ஆவது உபபிரிவின் மூலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு குந்தகம் விளைவிக்காது, பின்வரும் அதிகாரங்கள் கூட்டுத்தாபனத்திற்கு உண்டு :-

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியம், கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பின் மூலம் அல்லது வேறு வகையாக கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாகும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் பெற்றுக்கொள்ளவும் ;

(ஆ) அத்தகைய ஏதேனும் ஆதனங்களை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குவிட, கையளிக்க, கையேற்க, கைமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவும் ;

(இ) நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந்தமான நிதியங்களை கூட்டுத்தாபனத்தால் தீர்மானிக்கக்கூடியவாறான திறைசேரி வாக்குறுதிப் பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் ஏதேனும், பிணைப் பொறுப்புகளில் முதலீடு செய்தல் ;

(ஈ) வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் மற்றும் முடிவுறுத்தவும், பிணையுடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணத்தைக் கடனாக எடுத்தல் அல்லது பெற்றுக் கொள்ளல் ;

(உ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை எய்துவதற்காக அலுவலர்களையும் ஊழியர்களையும் சேவையில் சேர்த்துக் கொள்ளல், சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் சேவையிலிருந்து நீக்குதல் ;

(ஊ) நிதி சேகரித்தல் மற்றும் நிதி அல்லது பொருட்களைக் கொடையாக அல்லது நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளல் ;

(எ) நம்பிக்கைப் பொறுப்பின் நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் அதன் சொத்துக்களை முகாமை செய்தல் ;

(ஏ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை எய்துவதற்காக அரசு மற்றும் வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் ;

(ஐ) எத்தகைய நிதிகளை மூலதனமாகக் கருதுதல், எத்தகைய நிதிகளை வருமானமாகக் கருதல் என தீர்மானித்தல் ;

(ஒ) ஏதேனும் செலவினம், கிரயம் மற்றும் செலவு செய்தல் முறையாக மூலதனத்திலிருந்து அல்லது வருமானத்திலிருந்து செலவிடப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானித்தல் ;

(ஓ) சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணித்தல் மற்றும் சுற்றுலா கெப் வாகனங்கள் வழங்குதல், நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களுக்கு அமைவாக புதிய முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடல், கொள்கை விளக்கம் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் ;

(ஔ) விவசாயப் பண்ணைகள் மற்றும் விவசாய ஆதனங்களைக் கொள்வனவு செய்தல் ; அத்துடன்

(க) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்வதற்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டும் பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்காகவும் அல்லது எவற்றுக்காகவும் இச்சட்டத்தினதும் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) புலமைப் பரிசில்களை வழங்குதல் மற்றும் நிதி உதவி வழங்குதல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் நடவடிக்கைகளை மேற்கொள்கையில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களின் மற்றும் பல்வகை அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் அதிகாரங்கள், நடத்தை மற்றும் கருமங்களும் கடமைகளும் ;

(ஈ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு கூட்டுத்தாபனத்தால் செலவிடப்படும் செலவுகளைக் கொடுத்துத் தீர்த்தல் ;

(உ) நம்பிக்கைப் பொறுப்பின் ஆதனங்களில் நிர்வாகம் மற்றும் முகாமை, அத்தகைய நிதிகளின் கட்டுக்காப்பு மற்றும் அவற்றுக்கான கணக்குகளைப் பேணுதல், கணக்காய்வு செய்தல் ; அத்துடன்

(ஊ) நம்பிக்கைப் பொறுப்பின் குறிக்கோள்களை எய்துவதற்காக ஏனைய எல்லாச் செயல்களையும் செய்தல்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவது போன்று அதே போன்ற கூட்டத்திலும், அதே போன்ற முறையிலும் திருத்தவும், மாற்றவும் அல்லது அதற்கு ஏதேனுமொன்றைச் சேர்க்கவும் அல்லது நீக்கஞ் செய்யவும் படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டங்கள்.

**7**. (1) நம்பிக்கைப் பொறுப்பு ஆகக் குறைந்தது ஆண்டுக்கொரு முறையாவது கூடுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப் பொறுப்பின் தலைவரால் சகல நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கும் ஐந்து நாள் அறிவித்தல் வழங்கி விசேட பொதுக் கூட்டம் ஒன்றைக் கூட்ட இயலும்.

(3) கூட்ட நடப்பெண் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மூவரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சகல கூட்ட அறிக்கைகளும் அடுத்துறும் கூட்டத்தில் வாசிக்கப்பட்டு திருத்தங்களுடன் அல்லது திருத்தங்களின்றி அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(5) நம்பிக்கைப் பொறுப்பின் கூட்டங்கள் இலங்கையில் அல்லது பொட்ஸ்வானாவில் நடத்த இயலும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**8.** கூட்டுத்தாபனத்தின் நிதியம் –

(அ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று சங்கத்தின் வரவில் இருந்த எல்லாப் பணங்களும் ; மற்றும்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின்னர் கூட்டுத்தாபனத்துக்குக் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் நிதி வருடம் சகல வருடங்களிலும் ஏப்பிறல் 1 ஆம் திகதி ஆரம்பமாகி மாச்சு 31 ஆம் திகதி முடிவுறுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**9.** (1) கூட்டுத்தாபனமானது அதன் சகல வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கூட்டுத்தாபனத்தினால் நியமிக்கப்படும் கணக்காய்வாளரால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப் படவுள்ளனவும் நம்பிக்கைப் பொறுப்புக்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.

**10.** இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நம்பிக்கைப் பொறுப்புக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமெனப்படுதுடன், அந் நாளன்று நம்பிக்கைப் பொறுப்புக்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**11.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை நம்பிக்கைப் பொறுப்பின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இருவர் முன்னிலையிலன்றி எத்தன்மைத்தானதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகளை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை** (பிரிவு 2)

1. திரு. சூலபத்மேந்திர தஹநாயக்க
2. திரு. ஏர்ல் லக்ஷ்மன் ஜயவர்தன
3. திரு. தம்மிக கித்துல்கொட
4. திரு. ஜயந்த டபிள்யு. ஏ. செனவிரத்ன
5. திருமதி இந்திரா ஹேமலதா தஹநாயக்க
6. திரு. மொஹொமட் உவைஸ் மொஹொமட் தாரிக்
7. திரு. பலனிநாதன் விஜிதன்

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்